LIVEWORKSHEETS



**பாடம் 5: இலக்கணம் – ஒரு, ஓர் (பாடநூல் பக்கம் 73 முதல் 75 வரை)**

(உ.த.: 5.3.8- ஒரு, ஓர் / அது, அஃது / இது, இஃது / தன், தம் ஆகிய இலக்கண மரபினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.)

***பாட விளக்கம்:*** ஒரு மற்றும் ஓர் என்பது ஒன்றைக் குறிக்கும் சொல்லாகும்.

**ஒரு** – உயிர்மெய்யெழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.
(எ.கா: *ஒரு* பாடல், *ஒரு* கதவு, *ஒரு* புலி, *ஒரு* குயவன்)

**ஓர்** – உயிர் எழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.
(எ.கா: *ஓர்* ஆடல், *ஓர்* இதயம், *ஓர்* ஐயை, *ஓர்* உரல்)

**<u>கொடுக்கப்பட்ட வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் ஒரு மற்றும் ஓர் எனும் இலக்கண மரபைத் தேர்ந்தெடுத்துக் குறிப்பிடுக.</u>**

1. __________ அழகிய முயலை __________ நரி துரத்தியது.
2. __________ மரத்தடியில் __________ இனத்தைச் சார்ந்த இரு நரிகள் சந்தித்தன.
3. அந்த நரிகள் சண்டையிட்டுக் கொள்வதை __________ மானும் __________ ஆமையும் கண்டன.
4. __________ அணில் __________ கிளையில் அமர்ந்து வேடிக்கைப் பார்த்தது.
5. __________ ஆற்றில் __________ ஓடம் மிதந்து வந்தது.
6. __________ ஆசிரியரும் __________ மாணவியும் வகுப்பில் நுழைந்தனர்.
7. __________ ஊரில் __________ சிங்கமும் __________ எலியும் வாழ்ந்து வந்தது.
8. கண்ணன் __________ விரலால் __________ கைப்பேசியை முடக்கினான்.
9. __________ முரட்டுப் பையன் __________ இஞ்சி மிட்டாயை உண்டான்.
10. அந்த மூங்கில் காட்டிலிருந்து வந்த __________ உரத்த குரலைக் கேட்டு __________ சிறிய மந்தி பயந்தோடியது.

--ஆக்கம்: திருமதி ஜமுனா மாதவன்-- கேப்பிஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி--